செ.வெ.எண்: 656 நாள்: 03.10.2019

**பொதுத்துறை வங்கிகளின் சேவைகளை வாடிக்கையாளர்கள் அறிந்து பயன்பெற வேண்டும்.**

**புதுக்கோட்டையில் நடைபெற்ற பொதுத்துறை வங்கிகளில் சங்கமம் நிகழ்ச்சியில் வாடிக்கையாளர்களுக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் கடன் உதவிகளை வழங்கி**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை நகர்மன்றத்தில் பொதுத்துறை வங்கிகளின் வாடிக்கையாளர் மேம்பாட்டிற்கான வழிகாட்டுதல் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.10.2019) துவக்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

பொதுத்துறை வங்கிகளின் சார்பில் வாடிக்கையாளர்களுக்கு வீட்டு கடன், தொழில் கடன், கல்வி கடன் போன்ற பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வங்கிகளின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு வங்கி சேவைகள் குறித்து அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் இன்றைய தினம் வாடிக்கையாளர் மேம்பாட்டிற்கான வழிகாட்டுதல் முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் அனைத்து பொதுத்துறை வங்கிகளின் சார்பில் 26 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் பல்வேறு வங்கிகளின் சார்பில் கண்காட்சி அரங்கங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வங்கிகளின் சார்பில் வழங்கப்படும் கடன்களின் விபரம், கடன் பெறுவதற்கு சமர்பிக்கவேண்டிய சான்றுகள், வங்கிகளின் வட்டி விகிதம் போன்ற வங்கி சேவை குறித்த தகவல்கள் வாடிக்கையாளர்களுக்கு விளக்கமாக எடுத்துரைப்பதுடன் இதன் மூலம் வாடிக்கையாளர்கள் எளிதாக கடன் உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இம்முகாமில் 827 நபர்களுக்கு ரூ.25 கோடி அளவிற்கு பல்வேறு கடன் உதவித்தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இம்முகாம்கள் நடத்தி வாடிக்கையாளர்களுக்கு வங்கி கடன் உதவி வழங்கிட வங்கியாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு கடன் உதவி மட்டும் வழங்காமல்

மாவட்டத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளில் குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு குக்கிராமத்தை தேர்ந்தெடுத்து அக்கிராமத்தில் மத்திய, மாநில அரசுகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் பயனாளிகளுக்கு தேவையான உதவிகளை செய்யவும் அவ்வாறு செய்யும் பணிகள் குறித்த விபரங்களை ஒவ்வொரு மாதமும் ஆட்சியரகத்தில் நடைபெறும் வங்கியாளர்கள் கூட்டத்தில் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தவும் வங்கியாளர்களுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது. மேலும் வங்கிகளின் மூலம் மேற்கொள்ளும் இதுபோன்ற பணிகளால் வங்கிகளும் வளர்ச்சியடையும். எனவே வாடிக்கையாளர்கள் வங்கிகளால் வழங்கப்படும் இதுபோன்ற சேவைகளை அறிந்து பயன்பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பொது மேலாளர் ஜீவானந்தம், மண்டல மேலாளர் லெட்சயா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரமேஷ், வங்கியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

-----------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**